உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சித்தாந்தம்.

தொகுதி ௨] 1919௵ மேமீ [பகுதி ௫.

தசபுராணம்.

"காலமு நாள்களூழிபடையா முனேக வுருவாகி மூவருருவிற்
சாலவு மாகி மிக்கசமயங்களாறி னுருவாகி நின்ற தழலோன்
ஞாலமுமேலை விண்ணொடுலகேழுமுண்டு குறளாயொராலினிலைமேற்
பாலனுமாயவர்க்கோர் பரமாய மூர்த்தியவனு நமக்கோர் சரணே."

காலமும்=காலங்களையும், நாள்கள்=அக்காலங்களாலாய நாள்களையும், ஊழி=அந்நாட்கள் பலவற்றானாய ஊழியையும், படையாமுன்=சிருட்டிசெய்யத் தனதருட்சத்தியைப் பிரேரிப்பதற்கு முன்புதானே, ஏகவுருவாகி=தனக்குமேல் மற்றொரு முதற்கடவுளின்றித்தானே தனிமுதல்வனாகி, (பின் தனதிச்சையால் சிருட்டி தொடங்கத் திருவுளங்கொண்டகாலத்து) மூவர் உருவிற்=சிருட்டியாதிய முத்தொழில் நடத்துகைக்கு அக்கிருத்திய கர்த்தாக்களின் திருவுருவத்தில், சாலவுமாகி=மிகுதியுமதிட்டித்துநின்று, மிக்க சமயங்கள் ஆறின்=தனதுகொள்கையினாலுந்த மிக்க அறுவகைப்பட்ட சமயிகளுக்கும், உருவாகி=அவ்வவர்கள் எண்ணின திருக்கோலமாகி, நின்ற=தான் எக்காலத்தும் நாசமற்று நித்தனாய, தழலோன்=

தழல்போலுந் திருமேனியை யுடையானும், ஞாலமேழ் = கீழுலகங்களே ழையும், மேலைவின் ஏழ் உலகும் = மேலுள்ள ஏழுலகங்களையும், உண்டு = அவாந்தர சம்மாரத்து முதல்வன் திருவாணையானுண்டு, குறளாய் = (தன திருவைச் சுருக்கித் திதிப்படுங்கால் மீளத்திதிக்க) வாமனவுருக்கொண்டு, ஒரு ஆலின் இலைமேல் = ஒரு ஆலத்தின் இலையைத்தனக்குத் துயிலிடமாகக் கொண்டு அதனில், பாலனும் ஆயவர்க்கு = சிறிய பாலவுருக்கொண்ட விஷ்ணுமூர்த்திக்கு பரம் ஆய = மேலான தலைவனும் ஆகிய, மூர்த்தி = திருமேனியையுடையான், (யாவன்) அவன் = அப்பெருமுதல், நமக்கு ஓர்சரண் = நமக்கு ஓர் அடைக்கலப் பொருள் ஆவன். எ—று.

சிருட்டி தொடங்குமுன் இறைவன் ஒருவனே தனித்து இருந்தனன், இரண்டாவதாக ஒருவருமில்லை யென்னும் வேதவாக்கியப் பொருளும், சத் தொன்றே முதற்கணிருந்தது எனுஞ் சுருதியின் பொருளும் விளங்க ஏகவுருவாகி யென்றும், பின் தமதிச்சையால் அநாதிகேவலத்தி..ழுந்தியிருக்கும் ஆத்மாக்களுக்கருள் செய்வான் திருவுளங்கொண்டு பிரமன் மால் முதலிய திருவுருவை யதிட்டித்து மீண்டும் சிருட்டியாதி கிருத்திய கர்த்தாக்களை யேவி உலகம் நிறுவிப்பான் என்பார் மூவருருவிற் சாலவுமாகி யென்றும் மிக்க சமயங்களாதிறுருவாகியெனவே யெத்திறத்தவர் எவ்வாறு எண்ணி, தியானபாவனை செய்வரோ அவ்வவர்க்கு அவ்வவ் மூர்த்திமாருய் நின்றருள் செய்வான் என்றும் அருளியதாகும். சமயங்களாறெனப் பொதுப்படக்கூறினாரேனும் புறப்புறச்சமயம் புறச்சமயமும், அகப்புறச்சமயம் அகச்சமயமும் கூறியவாறாயிற்று. "ஆகாயத்துக்கு மேலாயுள்ள பரஞ்சோதி சிவபெருமான்" எனச்சாந்தோக்கிய உபநிடதங் கூறுதலால் தழலோன் என்றார். பிரளயம் பலவற்றுள் பாத்மகற்பமுடிந்த பிரளயம் ஒன்றில் விஷ்ணுமூர்த்தி தன்னிடந்தோன்றிய பதுமனைத் தன்னிட மடக்கிக்கொண்டு பாற்கடலில் ஓராலிலைக்கண் குழவியினுருக்கொண்டு கண்டுயில்வர் எனப் புராணங்கள் கூறுதலிற் பாலனுமாய் என்றார். அங்ஙனம் பாலனுயவர்க்குப், பாலனாய் வளர்ந்திடாப் பான்மையான் தலைவனாதலின் பரமாய மூர்த்தியெனவுங் கூறினர். இத்தகைய நலமுடையான் திருவருள் நமக்கு அரணாம் என்பார் ஓர் சரண் எனவும் ஓதினர் ஆறின் எனுமிடத்து இன் உருபை நான்காவதாக்குக. நின்ற எனும் எச்சம் இறைவனது சலியாமை யுணர்த்தி நின்றது தழலோன் எனவே பூதமைந்தின் எல்லாப்பூதங்களை யுமடக்கி நிற்றலுடன் அப்பூதத்தின் ஏற்றமுங் கூறியவாறாயிற்று. செய்யுளாதலின் ஆ ஒ வாயிற்று. ஏழ் எனும் எண்ணினை ஞாலத்துடனும் விண்

னுடனும் தனித்தனி கூட்டிப்பொருள்கொள்க. ஒருமொழியொழி தன்னினங் கொளற் குரித்தே யென்பதால் ஞாலம்விண் எழ்கூற அவற்றினடங்கிய கடலேழ் முதலியவுங் கூறியதாயிற்று. உண்டு, என்றதனால் அழித்தலின் எளிமை கூறிற்றும். ஆயவன் ஆகியவன் என்பதன் மரூஉ மொழி. பாலனும் எனும் உம்மை அவன் நெடியனுமானவன், ஆணையான் பாலனுமாயினன் எனக்கொள வருதல் ஆக்கத்துடன் சிறப்புப்பொருட்கண் வந்தது. ஞாலம் ,விண் எனவே ஆகுபெயரான் இடத்திலுள்ளாரைக் கொள்ளினுமாம். மேலை எனுமிடத்து ஐ சாரியை. மூவருருவிற் சாலவுமாகி எனவும் ஆதினுருவாகி எனவும் கூறியவதனால் முதல்வனது அருவம் உருவமாகிய இருவகைத் திருமேனிகளும் பெற்றும். முத்தொழில்களையும் இயற்ற வேறு வேறு கருத்தாககளிருக்க எற்றுக்கு ஒருவனே தலைவன் என்றதென்னின், ஏனையோரில், படைப்புக்கருத்தாவும், திதிக்கருத்தாவும், சகலரிற் பக்குவமுடையோரும், சம்மாரகருத்தாவாகிய உருத்திரன் பிரளயாகலரிற் பக்குவமுடையோனும் ஆதலால், பராசத்தியின் திருமேனியே தனக்கிடமாக உடைய பரமனே இவர்கள் மூவரையும் ஏவுதற்கருத்தா ஆவன். இதனை,

"உரைத்தவித்தொழில் கண்மூன்று மூவருக்குலகமோத
வரைத்தொருவனுக்கேயாக்கி வைத்ததிங் கென்னையென்னில்
விரைக்கமலத்தோன்மாலு மேவலான் மேவினோர்கள்
புரைத்ததிகாரசத்தி புண்ணியனண்ணலாலே.'

"இறுதியாங் காலர்தன்னி லொருவனே யிருவருந்த
முறுதியினின்றுரென்னி லிறுதிதானுண்டாகாதா
மறுதியிலரனேயெல்லாமழித்தலாலவனுவின்றும்
பெறுது நாமாக்க நோக்கம் போதிகரணத்தாலே"

என்னும் சித்தியார் திருவிருத்தங்களும்,

அவசங்கராசலங்கொண்டு நின்பெயர்சொல ஆழியங்கைத்
துவசங்கராவிழத் தோற்றுவித்தோய் தொலைபாகிலவை
நவசங்கராசிதரும் புகலூர என்னைவைக்கொண்டு நின்னைச்
சிவசங்கரா வென்னமாட்டேனடியேற் குன்திருவுளமே.

என்னும் மேலோர் வாக்கும் நிலைநிறுத்தும்.

பத்திராதிபர்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ மெய்கண்டமயம்

சகலசாஸ்திர நிர்ணய சங்கிரகம்.

தொகுதி - 8 - பகுதி 2 - பக்கம் - 43 - தொடர்ச்சி

பசுபதி யென்கிற நாமதேயம் சுருதிகளெல்லாம் பசுக்களென்கிறதற்கு ஆலோசனை தேவையில்லையே. இன்னுங் குணகிரிகைகளிலும் சொல்லுகிறோம். இரண்டாம்வேதம் சிவனுடைய ஆணையாற் சகலதேவதைகளும் தங்கள் தங்களதிகாரம் செலுத்துகிறார்களென்று சொல்லுகிறதினாலும், புராணவசனங்களவருடைய ஆணையாற் பிரமதேவர் சிருட்டிக்கிறார். விட்டுணு ரக்ஷிக்கிறார். காலாக்கினி ருத்ரர் சங்கரிக்கிறார். அந்த பினாகிக்குவந்தன மென்று சொல்லுகிறதினாலும் பாரதத்திற் சாந்தி பர்வம் மோக்ஷதன்மம் நாராயணியத்தில் நாரதர் நாராயணனைப் பார்த்துச் சொல்லுகிறது. நீங்கள் சநபதோ-ச கர்த்தாபந்தோர. நீங்கள் யாரைக் குறித்து தவசு பண்ணுகிறீர்களென்று கேட்கையில் சகலத்திற்குங்கர்த்தா ஒருவனுண்டு அவனுடையவாணையாலும் சகலதேவதைகளும் பரிபாலனம் பண்ணுகிறது. நாங்களுமவரையுபாசிக்கிறோமென்று சொல்லுகிறதினாலும் உத்தரராமாயணத்திற் சத்துருக்கனை லவணாசுரன்பேரிலனுப்புகையில் ஸ்ரீ நீலகண்டருடைய ஆணையை ஒருவராலும் கடக்கப்படாதென்கிறது நீயறிவையென்று சொன்ன ராமவாக்கியத்தினாலும் இன்னும் பிரமாணம் வெகுவாகையாற் சிவனுடைய ஆணையை சகலரும் வகிக்கிறார்களென்று சகல சாஸ்திர நிர்ணயம். சிவனே சகலருக்கும் நிக்கிரக வனுக்கிரகம் பண்ணுகிற கர்த்தா வென்கிறதற்குப் பிர்மாணம். பிர்மாவினுடைய சிரசிலொன்றை வைரவரைக்கொண்டு பரிகரித்த படியினாலும் விட்டுணுவினுடைய கெருவத்தை தக்கன் யாகத்தில் வீரபத்திரரைக் கொண்டு நிக்கிரகித்தபடியினாலும் அமுதம் சிவானுக்கிரகமில்லாமற் கடைந்தபோது காளகூடவிடத்தை விட்டு கெருவபங்கம் பண்ணினதினாலும் இரத்தபிக்ஷைக்கு

வைரவர் புறப்பட்டு வைகுண்டத்திலேபோய் விடுவ்சேனரையும் நிக்கிரகி
த்து நாராயணரையும் நிக்கிரகித்தபடியினாலும் மச்ச கூர்ம வராக வாமன
நரசிங்க அஞ்சு அவதாரமும் கெருவப் படுகையிற் பிள்ளையார் சாத்தர் சுப்
பிரமணியர் வைரவர் வீரபத்திரர் இவர்களைக்கொண்டு கெருவபங்கம் பண்
ணுவித்தபடியினாலும் விட்டுணுவங்கிசமாயிருக்கிற வியாசரை நந்திகேசுர
ரைக்கொண்டு கெருவபங்கம் பண்ணுவித்ததினாலும் விட்டுணுவினுடைய
பிள்ளை மன்மதனை நேத்திராக்கினிப் பொறியினாலே தகித்ததினாலும்
பிர்மாவினுடைய பிள்ளை தக்கனை வீரபத்திரரைக்கொண்டு நிக்கிரகித்தபடியி
னாலும் இந்திரன் அக்கினி முதலான தேவதைகளையெல்லாம் திரணத்தை
ப்போட்டு கெருவபங்கம் பண்ணுவித்தாரென்று மூண்டகோப நிடதம்
சொல்லுகிறதினாலும் தக்கனுடைய யாகத்திற் சகல தேவதைகள் இருடி
களை யெல்லாம் வீரபத்திரரைக்கொண்டு நிக்கிரகித்தபடியினாலும் அரியும்
பிரமாவும் நீ கர்த்தா நான் கர்த்தா வென்ற சம்வாதத்தில் அனலாகவெழு
ந்து இரண்டுபேரையும் அடிமுடி தேடச்சொல்லி கெருவபங்கம் பண்ணு
வித்தபடியினாலும் மார்க்கண்டர் சுவேதகேது முதலானபேருக்காக அந்த
கனை நிக்கிரகித்தபடியினாலும் தேவதைகள் கெருவப்பட்டபோது அசுரா
ளுக்கு வரங்கொடுத்து அவர்களை கெருவபங்கம் பண்ணிவித்தும் அசுராள்
கெருவப்பட்டபோது தேவதைகளுக்கு வரங்கொடுத்து அசுராளை கெருவ
பங்கம் பண்ணுவித்தும் இருக்கும் பிரமாணம் வெகுவாகையாற் சகல நிக்
கிரக கர்த்தா சாம்பசிவனென்றே சகலசாஸ்திர நிர்ணயம். சகலவனுக்கி
ரகத்திற்கும் பிரமாணம் சொல்லுகின்றோம். விட்டுணு சிவனை உபாசித்து
விட்டுணுபதமடைந்தாரென்று முதல் வேதமும் பாரதம் ஆரண்யபருவமும்
சகலபுராணங்களும் லௌகிகத்தில் பிரத்தியக்ஷமான தலங்களிருக்கிறதினா
லும் நேத்திரார்ப்பணம் பண்ணி துட்ட நிக்கிரகம் பண்ண சக்கரமடைந்த
படியினாலும் தசாவதாரத்தில் அஞ்சு அவதாரத்திற்கு ராமேச்சுரமுதலான
தலத்தில் அனுக்கிரகம் பண்ணினபடியினாலும் பிரமதேவர் சிருட்டிக்கிற
தொழிலும் பிரமலோகமும் சிவனை உபாசித்து அடைந்தாரென்று சுருதி
புராணங்கள் சொல்லுகிறதினாலும் பிரமா காலாந்தத்தில் சிருட்டி மறந்து
போய் நெற்றியிலுற்பவித்த ருத்திரரை சங்கம சிருட்டிபண்ணச் சொன்
னாரென்றும் விட்டுணுவினுடைய பிள்ளை மன்மதனை அனங்கனாகவிருக்கவும்
பிரமாவினுடைய பிள்ளை தக்கனை ஆட்டுமுகமாயிருக்கவும் அனுக்கிரகித்தா
ரென்றும் காலனை திரும்ப சீவிக்கப்பண்ணி அனுக்கிரகித்தாரென்றும் குரு
த்துரோகம் பண்ணின சந்திரனை சிரசிற்றரித்துக்கொண்டு அனுக்கிரகித்தா
ரென்றும் அரியும் பிரமாவும் அடியும் முடியுந்தேடிக்காணாமல் நின்று விட்

டுணு யதார்தம் சொன்னதனாலே லௌகீக வைதீகத்தில் நம்மைப்போல் உம்மையும் பூசிக்கக்கடவதென்றும் பிரமதேவர் யதார்த்தம் சொல்லாதபடியினாலே உம்மைப் பூசிக்கத் தேவையில்லை என்று சபித்துப் பின்புவெகுகாலம் பிர்மதேவர் தபசுபண்ணுகையில் வைதீகத்தில் மாத்திரம் உம்மை உபாசிக்கவென்று வரங்கொடுத்தாரென்றும் இந்திரன் அக்கினி முதலான தேவதைகளும் இருடிகளும் அசுராளும் காசிமுதலான தலங்களிலுபாசித்து சகலமும் பெற்றார்களென்றும் இருக்கும் பிரமாணம் வெகு ஆகையால் சகல அனுக்கிரக கர்த்தாவும் சாம்ப சிவனே. சகலருக்கும் நிக்கிரக வனுக்கிரகம் இவர் பண்ணுகிறார் போல் இவருக்கு நிக்கிரக வனுக்கிரகம் பண்ணுகிற கர்த்தா இல்லையென்று சகல லௌகீகமும் வைதீகமும் சொல்லும் இதுவல்லாமற் சர்வவிக்கினத்துவமில்லாத பேருக்கு சர்வநியந்தத்துவமில்லை அதேதென்னிற் சகலபூதத்தினுடைய காலக்ஷபங்கள் மக்ஷயமறிந்து தனுகரண புவனபோகம் வகுத்து கர்மானுகூலமாய் கால பரி பக்குவமறிந்து புத்தியை பிரேரகம் பண்ணி கன்ம பரிபக்குவ மறிந்து கன்மபலனை புசிப்பித்து நடத்துவிக்கப் போகாது ஆகையாற் சர்வ விக்கினனாயிருக்கிற சாம்பசிவனே பண்ணவேணும். அது பிர்மா விட்டுணு இந்திரன் எமதருமராஜன் முதலிய பேரெல்லாம் பண்ணுகிறார்களென்னில் அவர்களுக்கு சுதந்தரசத்தியில்லை சிவனாலே நியமித்து தொழில் பண்ணுகிறார்கள் அவர்கள் சுதந்தரமேயானால் பிரமதேவர் தம்முடைய சிரசிலொன்றை வைரவர் பரிகரித்ததை உண்டுபண்ணிக்கொள்ள மாட்டாததினாலும் மன்மதனும் சயந்தனும் பிறந்தபின்பு தேவதைகளுக்கு தங்கள் ஸ்திரீயிடத்தில் புத்திரனில்லா மற்போகக்கடவதென்று சபிக்கையில் அவர்களிடத்தில் புத்திரரை உண்டாக்கமாட்டாததினாலும் இன்னும் பிரமாணம் வெகுவாகையாற் பிரமதேவர் சிருட்டிக்கிற சுதந்தர ரல்லர். ஆலகாலவிடம் புறப்பட்டபோது விட்டுணு தம்மையும் தேவதைகளையும் ரெக்ஷிக்க சத்தியில்லாமல் கைலாயத்திற் சரணடைந்ததினாலும் வீரபத்திரர் தக்கன் யாகத்திற் பிரவேசிக்கையில் அந்த யாகத்தையும் தேவதைகளையும் ரெக்ஷிக்க சத்தியில்லாததினாலும் அவருடைய பிள்ளை மன்மதனை சீவிக்கப்பண்ணமாட்டாததினாலும் அவருடைய அவதாரங்களுக்கெல்லாம் சிவனே அனுக்கிரகம் பண்ணி ரெக்ஷித்ததினாலும் விட்டுணு ரெக்ஷிக்கிற சுதந்தர ரல்லர். நூறு அசுவமேதயாகம் பண்ணினவனுக்கு இந்திரபட்டம் வருகிறதினாலும் மார்க்கண்டர் முதலான பேருக்காக எமதருமராஜன் நிக்கிரகிக்கப்பட்டபடியினாலும் அவர்களும் சுதந்தரரல்லர். எல்லாத்தொழிலுக்குஞ் சுதந்தரர் சாம்பசிவனே. எழுவாரமுமுதிக்கிற ஆதித்தன் ஆதித்தவாரந் தொட்

டுவந்தாலும் ஆறுவாரத்திற்கு பேர்வேறும் ஆதித்தவாரம் ஆதித்தனுக்கென்று சொல்லுகிறுப்போல சங்காரகர்த்தாவென்று சொல்லுகிறது ஆகையாற் சாம்பசிவனே சர்வநியந்தா வென்கிறது சகலசாஸ்திர நிர்ணயம். சர்வ நியந்தாவென்கிற லெக்ஷணம் முற்றும்.

சாட்குண்ணிய பரிபூரணனுக்கு பகவனென்று சகலசாஸ்திர நிர்ணயம். சாட்குண்ணிய பரிபூரணமாவது ஈசுரத்துவம் வீரியம் கீர்த்தி ஸ்ரீஞானம் வைராக்கியம் ஆக இந்த ஆறு குணமும் சமக்கிரமமாய் ஒப்பற்றதாய் யாருக்கு இருக்கிறதோ அவருக்குப் பகவச் சத்தம் உண்மை. ஆகையாலிந்தவாறு குணமும் சாம்பசிவனுக்கே சமக்கிரம மென்கிறதற்குப் பிரமாணம் ஈசுரத்துவமிவருக்கல்லாம லிரண்டாந்தேவதைகளுக்கில்லையென்று முதலில் விரித்துச்சொன்னதை கண்டுகொள்க. வீரியமிவருடைய வீரியமே ஒப்பற்ற வீரியம். பிரமாவின் சிரத்தை நகத்தாற் பரிகரித்தாரென்றும் திரிபுரத்தை சிரிப்பாலெரித்தாரென்றும அந்தகனை காலால் நிக்கிரகித்தாரென்றும் இராவணனைப்பெருவிரல் நுனியால் நிக்கிரகித்தாரென்றும் வேர்வையிற்பிறந்த வீரபத்திரரைக்கொண்டு தக்கனுடைய யாகத்தில் விட்டுணுவாதி தேவதைகளை நிக்கிரகித்தாரென்றும் பிள்ளையார் சுப்பிரமணியர் வைரவர் வீரபத்திரரைக்கொண்டு விட்டுணுவினுடைய அஞ்சு அவதாரத்தையும் நிக்கிரகித்தாரென்றும் யட்சரூபமாக தேவசபையிற் வந்து திரணத்தைப் போட்டு இந்திராதி தேவதைகளை நிக்கிரகித்தாரென்றும் கெங்கையின் கெருவத்தை சிரசிலேவைத்து பனிதிவலைப்போலடக்கினாரென்றும் அந்தகாசூரனை வைரவரூபமாய் சூலமுனையினாற் கோத்துவிளையாடினாரென்றும் பார்வதியம்மன் சுக்கிரபகவானுடைய கெருவத்தையடக்கி உள்ளே எடுத்துகொண்டுவிட்டாரென்றும் இன்னுமளவிறந்தவீரியங்கள் சகலபுராணங்கள் சொல்லுகிறதினாலும் பாகவதத்திற் சிவன் திரிபுரதகன முதலான கிரிகைகளை பண்ணுகிறதருமையோ. சருவசங்காரகாலத்தில் நெற்றிக்கண்ணிலும் தளவுபொறிபுறப்பட்டு சகல செகத்தையும் கணப்பொழுதிற் சங்கரித்து நெற்றிக்கண்ணிலடங்குமென்று சொல்லுகிறதினாலும் சாம்பசிவனுடைய வீரியமே ஒப்பற்ற வீரியம். நாராயணருடைய வீரிய மெல்லாம் சிவனிடத்தில் வாங்கின சக்கரத்தாலும் அவதாரங்களிற் சிவனை உபாசித்து வரம்பெற்று பண்ணுகிற வீரியமென்றறிக. இனிகீர்த்தி சிவனுடைய கீர்த்தியே ஒப்பற்ற கீர்த்தி விட்டுணுநேத்திரார்ப்பணம் பண்ணி சக்கரமடைந்தாரென்றும் செகத்தைரெக்ஷித்திட சித்தியடைந்தாரென்றும் அவருடையதசாவதாரத்தில் அஞ்சு அவதாரத்திற்கு இராமேச்சுர முதலான தலங்

களிலே அனுக்கிரகம் பண்ணினாரென்றும் அவருடைய பிள்ளை மன்மதனை அனங்கனாக சீவிக்கப்பண்ணினாரென்றும் பிரமாவுக்குலோகத்தை சிருட்டிக்கசத்திகொடுத்தாரென்றும் அவருடையபிள்ளை மன்மதனை திரும்பசீவிக்கப்பண்ணினாரென்றும் இந்திராதிதேவதைகளும் சகலரிஷிகளும் அசுரர் ராக்ஷதருங் காசிமுதலான தலத்திலுபாசித்து தங்கள் தங்கள் பதமும் செல்வமும் பெற்றார்களென்றும் ஆலகாலவிஷத்தைக் கண்டத்திலே வைத்துக்கொண்டு சகலதேவதைகளையும் ரெக்ஷித்தாரென்றும் மார்க்கண்டர் சுவேதகேது இவர்களுச்கு நித்தியத்துவங் கொடுத்தாரென்றும் சிலாதருடைய பிள்ளை நந்திகேசுரருக்கு ஐந்துவயதில் மிருத்துவை நீக்கி நிததியத்துவங்கொடுத்தாரென்றும் குருத்துரோகம் பண்ணின சந்திரனை சடையிற்றரித்தாரென்றும் பிதிர்த்துரோகம் குருத்துரோகம் பிரமத்துரோகம் பண்ணின தண்டிகேசுரருக்கு நித்தியத்துவங்கொடுத்தாரென்றும் உபமன்னிய பகவானுக்கு திருப்பாற்கடலை வரவழைத்துக் கொடுத்தாரென்றும் அநேககோட்டிகாலம் தவசு பண்ணுவார் அடையுமுத்தியை காசியில் மரித்தபேருக்கும் சிதம்பரத்தை தரிசித்த பேருக்கும் திருவாரூரிற்பிறந்த பேருக்கும் அருணாசலத்தை நினைத்தபேருக்கும் எளிதாகமுத்திகொடுக்கிறாரென்றும் சகலபுராணங்களும் சொல்லுகிறபடியினாலும் ருத்ரகோடியிற் கோடிபிரமவிருடிகளுக்கு கோடிருத்ரரூபமெடுத்து அகாலத்திலே முத்திகொடுத்தாரென்றும் கூர்மபுராணமும் பாரதம் ஆரண்யபர்வமும் சொல்லுகிறதினாலும் வியாசருக்கு சுகரைப்பிள்ளையாக அனுக்கிரகித்தாரென்றும் இன்னுமளவிறந்த கீர்த்திகளுண்டு. அவைகளெல்லாம் சொல்லிமுடியாது. யாதொரு சாம்பசிவனுக்கு பூமிக்கு ஆதாரமாயிருக்கிற மகாமேரு வில்லுபூமிதேரிரண்டுக்குமாதாரமான சேஷன் நாண் உலகத்தைவிளக்குகிற சூரியன் சந்திரன் அக்கினி வண்டிலும் அம்புதுனியும் தன்மாதன்மங்களைக் காட்டிற் வேதநாலுங்குதிரைபிராணவங்குசை சரஸ்வதி வில்லுமணி மற்றதேவதைகளெல்லாம் தேருக்கு அவயவங்கள் இத்தனையும் சிருட்டித்த பிரமதேவர் சாரதி. இத்தனையுமுதாரத்தில் வைத்துக்கொண்டிருக்கிற நாராயணர் அம்பு. இப்படியானாற் சிவனுடைய கீர்த்திக் குறைப்புஉண்டோ. இதுவல்லாமற் பிரமதேவரும் நாராயணரும் அடிமுடி தேடிகாணாமற்போனார்களென்று சகலநூல்களும் சொல்லுவதினாலும் காசிமுதலான தலங்களிலிருந்து வெகு ஆத்மாக்களுக்கு அனுக்கிரகம் பண்ணுவதினாலும் சிவனுடைய கீர்த்தியே ஒப்பற்றகீர்த்தி ஸ்ரீயாவது செல்வம் பிர்மாவிட்டுணு இந்திரன் அக்கினி குபேரன் முதலான பேருக்கெல்லாம் சாம்பசிவனையுபாசித்து வந்த செல்வமென்றும் சாம்பசிவனுக்கு ஒருவரையுபாசித்து வந்தசெல்வமல்லவென்று சுருதி

யிதிகாசபுராண மிவைகளில் பிரத்தியக்ஷங்களாகக் கண்டுகொள்க. ஸ்ரீசத்தத்துக்கு காந்திமானென்றுமாம் கந்திருவருடைய காந்தியின் முன்னே அரி பிரமாதிதேவதைகள் காந்தியெல்லாமொப்பல்ல இதற்குப்பிரமாணம் கைலாயத்தில் ஈசுரிலீலையினாலே திருநயனத்தைப் புதைக்கையில் உலகமெல்லாம் அந்தகாரமாய் வெகுகாலங்கிடக்கையில் நெற்றிக்கண்ணைத்திறந்து சகலலோகத்தையும் பழையபடி விளக்கிவைத்தார். அந்தகாரமாய் கிடக்கையில் அரிபிரமாதி தேவதைகள் காந்திவிளக்கிவைக்கவொண்ணாதபடியால் சிவனுடையகாந்தியே ஒப்பற்றகாந்தி யென்றறிக. இனி ஞானமாவது சாம்பசிவனுக்கு இயற்கையுணர்வுமுற்றுமுணர்தலுமாமது மற்றதெய்வங்களுக்கில்லை யென்று சர்வவிக்கினலக்ஷணத்தில் விரித்துச்சொன்னதைக்கண்டுகொள்க. வைராக்கியமாவது சாம்பசிவரொருவரே மன்மதனைத்தகித்தவர். மற்றதேவாந்தரங்களெல்லாம் மன்மதன் வசப்பட்டபேர்கள். இதற்குப் பிரமாணம் நாராயணர் பிருந்தையிடத்திற் பிரவிர்த்தித்தபடியினாலும் அவதாரங்களில் காமவிகாரத்தாற் பீடிக்கப்பட்டதினாலும் பிரமதேவர் திலோத்தமையிடத்தில் ஆசைப்பட்டதினாலும இந்திரன் அகலிகையிடத்தில் ஆசைப்பட்டதினாலும் அக்கினி குபேரன் முதலியோருடைய கதை சொல்லிமுடியாது. தேவாந்தரங்களெல்லாம் மன்மதன் வசமடைந்தபேரே சரி. சாம்பசிவனொருத்தரே யீசுரரென்று சுருதிபுராணங்கள் சொல்லுகிறதினாலும் தேவியைவிட்டு தெக்ஷிணாமூர்த்தமாக தேவவருடத்திற் பதினாயிரம் வருடம் எழுந்தருளியிருக்கையில் மன்மதனிருந்தும் சகலதேவதைகளுக்கும் விகாரமற்றுப்போனதினாலும் மன்மதனைத்தெகித்து தேவியுடன் கூடி வெகுகாலம் இருக்கையில் சகலதேவதைகள் சராசரங்களுக்கெல்லாம் விகாரமுண்டானபடியினாலும் பின்பு ரதிக்காக மன்மதனை அனங்கனாக்கையினாலும் அவர் தேவியுடன் கூடியிருக்கிறது காமவிகாரத்தாலல்ல. ஆத்மாக்கள் நிமித்தமென்று சகலசாஸ்திர நிர்ணயம். ஈசுரத்துவ முதலாக ஆறுகுணமும் சமக்கிரமமாகச் சாம்பசிவனுக்கே சொல்லப்பட்டதினாலே இவரே பகவனாகையாற் சுருதிமிருதி இதிகாச புராணங்களும் பகவனென்றும் பாகவதரென்றும் பகத்மரென்றும் சொல்லிற்று. இந்த ஆறு குணத்திலே குணத்துக்குக்குணம் அடக்கமாகவில்லாமல் எவ்வளவாகிலும் தாரதன்மியமாக யிருக்கையால் தேவாந்தரங்கட்கும் பகவச்சத்தம் உபசாரமாகச் சொல்லும். அதுயாருக்கென்றால் நாராயணர் பிரமதேவர் இந்திரன் அக்கினி சூரியன் வருணன் வாயு வியாழன் சுக்ரன் முதலான தேவதைகளுக்கு சொல்லுமென்றறிக. நாராயணருக்கு பகவ

னென்றும் அவருடைய பத்தாள் பாகவதர்களென்றும் அவருடைய புராணம் பாகவதமென்றும் சகலரும் சொல்லுகிறார்களே யென்னில் அந்தவசனத்துக்கு பாரதவசனங்கொண்டு உண்மையோ உபசாரமோ வென்றறிக. பாரதவசனமெதுவென்றால் சாந்திபர்வம் மோக்ஷதன்மத்தில் அனுப்பிருதியில் நாரதர் நாராயணரைத் துதித்தபின்பு நாரதரைப்பார்த்து நாராயணசாமி திருவுளம் பற்றுகிறது. நாம் பகவானுடைய சம்பந்தம். எனக்கு அவருடைய சம்பந்தம். எனக்கவர் கெட்டுப்போகார் நானுமவரும் பேதமென்ற உத்தரத்திலு முபசாரமேயென்றறிக ஆகையால் சாம்பசிவனென்று சகலசாஸ்திர நிர்ணயம். அஞ்சாவது சாட்குண்ணியபரி பூரணமுள்ளபகவா னென்கிறலெக்ஷணம் முற்றும். சிவசிதம்பரம் நமசிவாயந் துணை.

பரமாத்மா சிவனாகையால் அவரேபதி. சீவாத்மாக்கள் பசு. பசுக்களெல்லாம் பதியினிடத்திலேயே சேருகிறதினாலே திரீயென்றும் பதியைப் புருடனென்றும் சகல சாஸ்திரநிர்ணயம். புருடசத்தம் சிவனுக்கே என்கிறதற்குப் பிரமாணம் இரண்டாம் வேதம் பஞ்சப்பிரமமந்திரத்தில் அந்தப் புருடனென்ற நாம மிருக்கையாலும் புருடனுருத்திரனே யென்று சொல்லுகிற சுருதியினாலும் பெருவிரல் மாத்திரம் புருடன். சகலசெகத்துக்குமீசனென்கிற சுருதியினாலும் மந்தரபுட்பத்திலந்த புருடனாலே எங்கும் பரிபூரணமென்கிறதினாலும் சுருபதியான மந்திரத்தில் அந்த புருடசத்தமிருக்கிறதினாலும் உபநிடதப் பிரமாணங்களினாலும் புராண பாரத பிரமாணங்களினாலும் புருடசத்தம் சாம்பசிவனுக்கே. புருடசூத்தம் நாராயணரைசொல்லுகிறது அதிலே புருடசத்தம் நாராயணருக்கல்லோவென்னில் புருடசூத்தத்தை அலப்பிரகாரம் யோசித்தால் நாராயணரைப்போல தோன்றும் சாஸ்திரத்திட்டி பிரகாரம் யோசித்தால் சாம்பசிவனே இதற்குப் பொருள். இதற்குப் பிரமாணம் அந்த புருடசூத்தத்தி லீசுரசத்தமிருக்கிறபடியினாலும் ஸ்ரீருத்திரர் சிவனை ஆயிரஞ்சிரசு ஆயிரவாகுவென்று சொல்லுகிறதினாலும் பாரதம் துரோணபருவத்திற் கிருட்டிணதேவனும் அருச்சுனனும் பாசுபத நிமித்தமாகப்போய் சாம்பசிவனை வெகுவந்தனம் பண்ணி வேதமந்திரத்தாற்றுதிக்கையில் ஆயிரம்வாகு ஆயிரங்கால் ஆயிரங்கண் ஆயிரஞ்சிரசுடனிருக்கிற ருத்ரமூர்த்தியே உனக்கு வந்தனமென்றும் அசுவமேதயாக பருவத்தில் மருத்தனுக்கு சவத்தர் உபதேசித்த வேததுதியில் ஆயிரம் சிரசு ஆயிரங்கண் ஆயிரங்கால் ஆயிரங்கையுடனிருக்கிற உருத்திரமூர்த்திக்கு வந்தனம் என்பதனாலும் பாரதம் அனுசாசனிகபர்வம் உப

மன்னிய வியாக்கியானத்திலும் சாந்திபர்வம் மோக்ஷதன்மத்திலும் மற்றுமுள்ளபர்வங்களிலு மிந்தப்படியிருக்கிறதினாலும் புராணவசனம் கூர்மம் காந்தம் சூதகீதை முதலானபுராணங்களிலு மிந்தப்படியே யிருந்ததினாலும் புருட உத்தமரென்னும் நாமதேயம் நாராயணருக்கல்லோவென்னில் ஆத்மவர்க்கத்தில் ஆண் பெண் அலி யென்று மூவகையுண்டே அதிலே முந்திசொன்னது ஆணாகிற புருடாத்மாக்களிற் பிரமதேவர் முதலானபேரைக்காட்டிலும் சர்வாங்கத்திலும் சிரேட்டர் நாராயணராகையால் புருடோத்தமனென்று நாமதேயம் இதல்லாமல் அந்தபுருடனென்ற நாமதேயம் சாம்பசிவனுக்கென்றேயறிக. பாரதத்தில் பாகவதத்தில் கிருட்டிணதேவர் வாக்கியம் உத்தமராய் புருடராய் அன்னியனாய் பரமாத்மாவென்று உதாகரிக்கப்படுகிறவஸ்து ஈசுரனென்று சொல்லுகையினால் புருடர் சாம்பசிவனென்றே நிர்ணயம் ஆறாவது புருடனென்கிற லக்ஷணமுற்றும். சிவமயம் சிவமயம் சிவசிதம்பரம் முன்னிற்க. சொக்கலிங்கம் முன்னிற்க. தேவியென்கிற நாமதேயமுமவனே பிரதிவாதிக்கிற நூலுக்கு தேவிமகாத்மியமென்றிருக்கிறதினாலும் சரசுபதி லக்ஷுமி முதலானபேருக்கெல்லாம் தேவியென்கிற நாமதேயமில்லாத படியினாலும் தேவி பார்வதியே தேவியென்று நாமதேயம் வருவானேன் யென்னிற் தேவருடைய பத்தினி தேவியென்றே சகலசாஸ்திரநிர்ணயம். ஆகையாற்றேவர் சாம்பசிவனே. தேவசத்தத்துடன் மகா சத்தமுங்கூடி மகாதேவரென்று நாமதேயமுமிவருக்கே இந்தப்படிபட்டாசாரியரும் மகாதேவரே தேவர் அவரே சகலத்திலும் ஆராதிக்கப்படுகிறவர் வேதமார்க்கமே மார்க்கம் இதையல்லவென்று சொல்லுகிறவன் தலைமேலே தம்முடைய காலென்றார். இன்னும் பலபிரமாணத்தினாலும் தேவர் சாம்பசிவனே ஆகையால் தேவதாந்தரங்களுக்கு தேவசத்தஞ் சொல்லுகிற சுருதி புராணங்களிழுக்கென்றே சகல சாஸ்திர நிர்ணயம். ஏழாவது தேவரென்கிற லக்ஷண முற்றும். சிவசிதம்பரந்துணை.

சகல சராசரங்களிடத்திலும் அந்தற்பூதமாக அதிட்டாத்தாவாகவும் சகலவிலக்ஷணம் சகலசாக்ஷியாகவும் சின்மயமாகவுமிருக்கிற வஸ்துவுக்கு சர்வாந்திரியாமியென்று சகல சாஸ்திரநிர்ணயம். அது சாம்பசிவனேயல்லாமலிரண்டாந்தேவதைகளல்ல வென்றலெக்ஷணம் விசுவத்தை சிருட்டித்து அதிலே பிரவேசித்திருக்கிறாரென்ற சுருதிபுராணத்திலும் அக்கினி முதலான சகலபூதத்தினிடத்திலுமிருக்கிற வஸ்து உருத்திரனென்கிற சுருதிபுராணத்தினாலும் அதற்குச்சிவிவிட்டாவென்கிற நாமதேயம் சுருதிகளினாலும் அமரசிங்கமூன்றுங்காண்டத்திலும் அவருடைய அட்டோத்ர நாம

ங்கள் சகஸ்திரநாமங்களில் வருகிறபடியினாலும் சகலத்துக்கும் இலக்ஷணம் சகலத்திற்குஞ் சாக்ஷி சின்மயம் சதாசிவவென்றுங் கைவல்ய உபநிடதஞ் சொல்லுகிறதினாலும் சர்வாந்திரியாமி சாம்பசிவனென்றே சகலசாஸ்திர நிர்ணயம். விசுவங்கள் பூதங்கள் புவனங்கள் இறந்துபோனது பிறந்திருக்கிறது பிறக்கப்போகிறது எல்லாம் உருத்திரசொரூபமென்று சொல்லுகிற சுருதிபுராணத்தினாலும் முதல்வேதம் ருத்ர அத்தியாயத்திலும் இரண்டாம் வேதம் சதருத்திரியத்திலும் மூன்றும்வேதம் ஏகாதசருத்தரீயத்திலும் சகலமுமுருத்திர சொரூபமென்று சொல்லுகிறதினாலும் சொரூபதியானமந்திரத்தில் விசுவரூபமென்றிருந்ததினாலும் மற்றுமுள்ள சுருதியுபநிடதங்களினாலும் விசுவரூபர் சாம்பசிவன் என்றிருந்ததினாலும் அதர்வணசிகா உபநிடதத்தில் நாராயணர் பிரமதேவர் இந்திரன் அக்கினி வாயு முதலான தேவதா சொரூபமாக விருக்கிற ருத்ரமூர்த்திக்கு வந்தனம் என்கிறதினாலும் மற்றுமுள்ள உபநிடதங்களிலும் அந்தப்படிச் சொல்லுகிறதினாலும் கூர்மபுராணம் உத்தரகாண்டத்தில் வெதிரியாச்சிரமத்தில் நரநாராயணருக்கு சிவன் விசுவரூபங்காட்டி அதிலே நாராயணரை அடக்கிக்கொண்டதினாலும் பாத்மபுராணம் உத்தரகாண்டத்தில் இராமபத்திருக்கு உபதேசித்த சிவகீதையில் விசுவரூபங் காண்பித்தாரென்கிறதினாலும் மற்றுமுள்ள புராணங்களில் வருகிற பிரமாணங்களினாலும் பாரதத்திற் சிவனுடைய கதை வந்தவிடத்திலே யெல்லாம் விசுவரூபமாயிருக்கிறவருக்கு வந்தனமென்றிருக்கையினாலும் அட்டமூர்த்தி சொரூபமென்கிற நாமதேயம் சகலநூல்களிலும் சொல்லுகிறதினாலும் சகலமுமுருத்திர சொரூபமேயல்லாமல் வேறில்லையே. அப்படியிருக்க அந்தர்யாமியாகச் சொன்ன வசனத்திற்கு போக்கேதென்னில் ஆனாயென்பது ஆக்கியோன் பெயரே யென்கிற சாஸ்திரத்தினா லெல்லாவற்றையுமுண்டாக்கினது சிவனாகையால் எல்லாஞ் சிவசொரூபமென்று சொல்லலாம். இதற்குப்பிரமாணம் மந்திரபுட்பத்தில் உருத்திரனே எங்கும் பரிபூரணன், அவருக்குமேற் பரமில்லையென்று சொன்ன சுருதியே பிரமாணம். நாராயணரை உள்ளும் புறமும் காணப்படுகிறது கேட்கப்படுகிறது எல்லாவற்றிலும் வியாபித்துக்கொண்டிருக்கிறவரென்று மற்கு விட்டுணு வாசுதேவர் நாராயணரென்று நாமதேயமிருக்கிறபடியினாலும் சர்வாந்திரியாமியவரென்று சிலசாத்திரஞ் சொல்லுகிறதேயென்னில் ஆகாயவியாபகத்துக்குள்ளே வாயு அக்கினி முதலான பூதங்கள் வியாபகமடங்குமதுபோல சிவனுடைய பூரணத்துக்குள்ளே நாராயணர் வியாபகமே யல்லாமல் மற்றப்படியல்ல வென்கிறதற்கு பிரமாணம் மந்திரபுட்பத்தில் ருத்திரனாகிற புருடனே எங்கும் பரி

பூரணன் அவருக்குமேற் பரமில்லையென்று சொல்லுகிறதினாலும் பரத்திற்கு பரமாத்மா பிரமதேவர் அவருக்கு பரம் விட்டுணு; அவருக்குப்பரமீசன் அவருக்குச் சரியுமில்லை அதிகருமில்லை என்கிற சுருதியினாலும் ருத்ரரொருவரேவஸ்து; இரண்டாம்வஸ்து இல்லையென்கிற சுருதியினாலும் விசுவரூபம் விட்டுணு விசுவத்திற்கு ஈசன் ருத்ரனென்றும் எயிக்கிய சொரூபம் விட்டுணு எயிக்கியத்துக்கு ஈசுரன் ருத்ரனென்றும் பிரகிருதிவிட்டுணு புருடன் மயேச்சுரன் ஆகையால் விட்டுணுவல்ல அவரை அடியும் முடியும் தேடி அரியும் பிரமாவும் காணமாட்டாமற் போனார்களென்ற சுருதியினாலும் அவரென்கிற நாம மிருந்தபடியினாலும் அன்னம் பிரமதேவர் சாரம் விட்டுணு. புசிக்கிறவர் மயேச்சுரனென்ற சுருதியினாலும் சிவனொருவனே பதி மற்றுள்ளவெல்லாம் பசுக்களென்ற சுருதிபுராண வசனத்தினாலும் அஞ்சாம் வேதமாகிய பாரதத்திற் சாந்திபர்வம் மோக்ஷதன்மனுஸ் மிருதியில் நாராயணரைத் துதிக்கையில் அவர் நாரதரைப்பார்த்துச்சொன்னது. அந்த பகவானுடைய சம்பந்தம் நான். எனக்கவர் கெட்டுப்போகார் நானுமவருமபேதமென்றிருந்ததினாலும் அடுத்தாப்போல குரு சிஷீய சம்வாதத்தில் அந்தவஸ்துவை தேவதைகளும் அறியமாட்டார்சள் இருடிகளும் அறியமாட்டார்கள் நாராயணரொருவரே யறிவர் அவர் சொல்ல சகலருமறிந்தார்கள் என்றிருக்கையாலும் இருபத்தைர்தாம் தத்துவம் விட்டுணு அவர் ஆத்மா இருபத்தாறும் தத்துவம் பரமாத்மா அது சிவமயமென்று அநேகமிடத்திலிருப்பதாலும் இருபத்தாறும் தத்துவமே வஸ்து அவரீசானர் சோதி அவயவம் எங்குங்கை யெங்குங்கால் எங்குஞ்சிரசு எங்குங்கண் எங்குங்காது என்று சொல்லுகையினாலும் சாங்கியத்தில் நாராயணரை வயிக்கும் பரமாத்மா பாமாத்மாவையென்றும் வயியாது என்று சொல்லுகையினாலும் நாராயணியத்தில் கிருட்டிண தேவர் அர்ச்சுனனைப்பார்த்துச் சொல்லுகிறது நாம் உலகத்துக்கு எல்லாம் ஆத்மா பாண்டு நந்த எவருக்கும் பரமாத்மா ருத்திரர் அவரையானு முபாசிக்கிறே மென்றதினாலும் ஆக இது சாந்திபர்வம் மோக்ஷதன்மத்தில் அசுவமேதயாக பருவத்தில் அனுகீதையில் முன்னுபதேசித்த பகவற்கீதை மறந்துபோய் கிருட்டிண தேவரை அர்ச்சுனன் கேட்கையில் முதலில் பிரமத்தியானம் பண்ணிக்கொண்டு சொன்னேமிப்போது அந்தப்பிரமத்தை தியானிக்கச்சாத்தியமல்ல இதிகாசங்கேட்டபடியுபதேசிக்கிறோமென்று சொன்னதினாலே பிறகு உபதேசமெல்லாம் பரப்பிரமமாயிருக்கிற சிவப்பிரீதிவாதமென்றே யறிக. இன்னும் பாரதப்பிரமாணம் வெகு விட்டுணு புராணம் சர்வசத்திமயோ விட்டுணு சுருபம் பிரமம் பரமென்ற வசனத்தினாலும் காந்தஞ் சூதசங்

கிதை பிரமகிதையில் பரமசிவ சமுத்திரத்திலே சர்வதேவதைகளுந் திவலை மாத்திரமென்ற பிரமதேவர் வசனத்தினுலும் மற்றுமுள்ள பிரமாணம் வெகுவாகையாற் சுருதி மிருதி இதிகாச புராணத்திலும் சிவனுடைய பூரணத்துக்குள்ளே நாராயணர் வியாபகம் அடக்கமென்றே சகலசாஸ்திர நிர்ணயம். பகவற்கிதை பதினெட்டாமத்தியாயத்தில் ஈசுரனே சர்வபூதத்தி னிருதயமத்தியிலிருந்து தம்முடைய மாயையால் எந்திரங்களையாட்டி வைத்தற்போலப் பிரேரகம் பண்ணுகிருரென்றிருக்கையாற் சர்வந்தரியாமி சாம்பசிவனே. இதற்குத்திருட்டாந்தஞ் சொல்லுகிறும் சுவாமி தக்ஷிணமூர்த்தமாக தேவவருடத்திற் பதினுயிரவருடம் எழுந்தருளியிருக்கையில் சகலசராசரங்களும் பிரவிர்த்திக்காமல் போனதினுலும் ஈசுரி ஈசுரன் லீலையினுலே திருநயனத்தைப் புதைக்கையிற் சூரியன் சந்திரன் அக்கினி நக்ஷத்திரமுதலானவர்களுக்கு பிரகாசமற்று வெகுகாலங்கிடக்கையாலும் மதுரையிலே பிட்டுவாணிச்சிக்காக மண்சுமந்த சொக்கநாத சுவாமியை பாண்டியனடியாமலடித்த பிரம்படி சகல சராசரங்களிலும் பட்டதென்கிற வசனம் வைதீகத்திலும் பிரசித்தமானதினுலும் சிவனே சிவனென்றும் சிற்சத்தியே சிவனுக்கறிவென்றும் ஆகையாற் சிவசத்திமயமே பிரபஞ்சமென்றும் சகலஉபநிடத புராணங்கள் சொல்லுகிறதினுலும் இன்னுமநேக திருட்டாந்தத்தினுலும் சர்வாந்திரியாமி சாம்பசிவனென்றே சகலசாஸ்திர நிர்ணயம். அதல்லாமற் சர்வவிக்கினத்துவ மில்லாத வஸ்துவுக்கு சர்வாந்திரியாமியத்துவங் கூடாது. அதேதென்னிற் சகலபூதத்தினிடத்திற் திருட்டாந்தமாக விருந்து காலக்ஷயங்கள் மக்ஷயமறிந்து தனுகரண புவனபோகத்தை நிர்மிக்கவும் அந்தத்தனுவிற் செய்த கன்மப்பயனை யறிந்து பகிர்ந்து நரக சொற்கங்கொடுக்கவும் அந்தசேடத்திற்கு ஈடாக தனுகரண புவன போகத்தை வகுக்கவுங் கர்மானுகூலமாய் காலபரிபக்குவமறிந்து ஆத்மாவினுடைய புத்தியை பிரேரகம் பண்ணவும் கர்மபரிபக்குவ காலமறிந்து கர்மப்பயனை கூட்டிப் புசிப்பிக்கவும் இந்த அஞ்சுகாரியத்துக்குஞ் சர்வவிக்கினனே வேணும். அந்தசர்வவிக்கின நாமஞ் சாம்பசிவனுக்கே இத்தனைக்கும் நாராயணர் பிரமதேவர் இந்திரன் இயமதன்ம ராஜன் மற்றுமுள்ள தேவதைகளெது மாத்திரம் அவர்களிடத்திலிருந்து உணர்த்துவிக்கிறது சாம்பசிவனேயாகையாற் சர்வாந்திரியாமி சாம்பசிவனென்றே சகலசாஸ்திர நிர்ணயம். எட்டாவது சர்வந்திரியாமி லெக்ஷண முற்றும். சிவமயம்.

சர்வராலும் பூசிக்கப்படுகிறவர்க்கு உபாசியரென்று சர்வசாஸ்திர நிர்ணயம். அதுசாம்பசிவனே. முதல்வேதத்தில் உருத்திரர் உம்முடைய

ஐசுவரியத்தை இச்சித்து சகலதேவதைகளும் விட்டுணுவும் உம்முடைய லிங்கத்திலுபாசித்து தாங்கள் தங்கள் பதமடைந்தார்களென்றும் பாரதம் சாந்தி பருவமிராசதன்மத்திலின்னதேவதையை யுபாசித்தானின் தத்துவங்கடக்கலாமென்று சொல்லிக்கொண்டு வந்தவிட்டுணு இந்திரன் காலாக்கினி ருத்ரர் கிருபர் பிதா மகன் முதலோரெப்போதும் மயேசுரனை ஆர்ச்சித்து நாணுவிச்மாயிருக்கிற தோத்திரமும் பணிணிக்கொண்டிருப்பார்கள். அவரை யுபாசித்தாற் சகலதுக்கமுங் கடக்கலாமென்று அனுசாசனீக பர்வத்திலும் மற்றுமுள்ள பர்வங்களிலுமப்படியே யிருந்ததினுலும் விட்டுணு மரகத லிங்கத்திலும் பிர்மா வச்சிரலிங்கத்திலும் தேவேந்திரன் சிவலிங்கத்திலும் பூசித்து தங்கள் தங்கள் பதமடைந்தார்களென்று காந்த முதலான புராணஞ்சொல்லுகிறதினுலுங் கூர்மலிங்க பாத்மபுராண முதலான புராணங்களிலுஞ் சிவனே உபாசியர் அரி பிரமாதி தேவதைகளுஞ் சகல ரிஷிகளும் ஆசுர ராக்ஷதரும் மற்றுள்ளபேரும் உபாசகாளென்று சொல்லுகிறதினுலும் சாம்பசிவனே உபாசியர் உபாசித்த தலங்களுஞ் சொல்லுகிறும் பாரதம் ஆரண்யபர்வம் தீர்த்தயாத்திரக்கதையில் அருச்சுனன் தீர்த்தயாத்திரைச்சருக்கத்தில் நாராயணர் வெகுகாலம் உருத்திரனை ஆராதித்து சிவன் பிரசன்னமாயவர்க்கும் விட்டுணுவேயும்மைம்போல நமக்குவேண்டிய பேருமில்லை. உம்மைப்போல நம்மை யுபாசிக்கிறபேருமில்லை. என்று இன்று முதல் செகத்திற்கும்முடைய வாதினம் ரெக்ஷிக்க அதிட்டசத்தியும் தந்தோமென்திருக்கிறதினுலும் பாத்மபுராணம் பிரமகைவர்த்தத்திலும் விட்டுணு திருவீழிமிழலையில் நேர்த்திரார்ப்பணம் பண்ணி சக்கரமடைந்தாரென்றும் கூர்மபுராணம் காந்தம் அக்கினி புராணம் சைவபுராணத்திலும் ஆதி விட் டுணுவாயிருக்கிறவபூசித்ததலமிருதியென்று சொல்லுகிறதினுலும அவருடைய அவதாரம் மச்சாவதாரத்தில் பூசித்தது காசி, கூர்மாவதாரத்திற் காசியிலும் காஞ்சியிலும், வராகங் காசியில், வாமனங்காசியிலும் பாண்டியிலும், நரசிங்கம் காசியிற், பரசுராமர் சோழபூமியிலும் காசியிலும் துவாரகையிலும், தசரத ராமர் இராமேச்சுர காசியிலும் புருஷோத்திரத்திலும் நாராயணரும் பரிச்சித்து வெதிரியாச்சிரமமென்றுங் கூர்ம முதலான அரிவங்கிசத்திற் பவானிகூடல் சோச்பூமியிலும் பலபத்திரராமர் சேதுவிலும் காசியிலுந் துவாரகையிலும் கிருட்டிணதேவர் துவாரகையிலும் உபமன்னியாச்சிரமத்திலும் கற்கியவதாரத்திற்காசியிலும் புருஷோத்திரத்திலும் நரநாராயண ருபாசிதத்து வெதிரியாச்சிரம மென்றும் கூர்ம முதலான புராணமும் பாரதம் துரோண பருவமும் சாந்திமோக்ஷதன்மத்தில் நாராயணியமும் லெக்ஷுமிதேவி

பூசித்து கமலாலயம் ஸ்ரீ வாஞ்சியம் மற்று முள்ளதலங்களிலும் மன்மதனுபாசித்தது கயிலாயத்தாழ்வரையிலும் சோழபூமியிலும் சேடபகவானுபாசித்தது சிதம்பரம் வியாச ருபாசித்தது மகாமேருவடியிற் கள்ளிகாவனத்தண்டையிலும் காசியிலும் தெத்தாத்திரையர் கபிலர் நாரதர் மற்றுமுள்ள அங்கிஷவவதாரங்களும் பூசித்த தலம் சொல்லிமுடியாது ஆக நாராயணர் வகுப்பு. பிரமதேவ ருபாசித்தது காசியிலும் சோழபூமி சீகாழி விரிஞ்சிபுரம் சேது குருக்ஷேத்திரம் தக்கப்பிரசாபதியானு பாசித்தது காசியிலும் சோழ பூமியிலும் காயத்திரி சாவித்திரி சரசுபதியுபாசித்தது காசியிலும் சோழபூமியிலும் சனகாதி நால்வருமுபாசித்தது கயிலாயத்தாழ்வரையில் ஆகயிவை பிரமதேவர் வகுப்பு இந்திரனுபாசித்தது பாண்டியிலும் காசி திருவண்ணாமலை சோழபூமியிலும் இந்திராணி பூசித்தது காசியிலும் அக்கினி முதலான மற்றதிக்குப் பாலகர் பூசித்தது திருவண்ணாமலை காசி சோழபூமி பாண்டியிலும் ஏகாதசருத்ராள் துவாதச ருத்ராள் அட்டவசுக்கள் சத்தமாதர்கள் அசுவனிய. தேவதைகள், கின்னரர்கிம்புருடர் கெருடர் காந்திருவர் இயக்கர் விஞ்ஞையர் முதலெல்லாரும் பூசித்தது காசி சோழபூமி மகாமேருகயிலாயத் தாழ்வரையிலும் பிதிர் தேவதைகளுபாசித்தது பாரதம் ஆரணிய பர்வம் சோணநதிக்கரையிலும் மற்ற புராணங்களில் காசிசோழ பூமியிலும் தேவி பூசித்தது இமவான் சகாம்பிகை காஞ்சிபுரம் சோழபூமிபாண்டியிலும் கணபதி பூசித்தது காசி சோழபூமி சுப்பிரமணியர் பூசித்தது காசி சோழபூமி கயிலாயத்தாழ்வரை மற்றகணங்கள் பூசித்தது காசி புராணம் பூசிததது ஓங்காரமயேச்சுரம் வேதம் பூசித்தது வேதாரண்ணியம் திரிசந்தி பூசித்தது காசியில் சத்த இருடிகள் அகத்தியர் ததீசி கண்ணுவர் சதானந்தர் துர்வாசர் மங்கனர் மார்க்கண்டர் பதஞ்சலி வியாக்கிரபாதர் உபமன்னிய பகவான் இடபயோகி பிருகு வங்கிஷத்திருடிகள் பாலகில்லியாள் பிருங்கிருடி முதலான தேவவிருடிகள் பிரம விருடிகள் இராஜ இருடிகள் பூசித்தது கயிலாயத்தாழ்வரை காசி சோழ பூமி இராஜாக்கள் அசுராள் இராக்ஷதாள் பூசித்ததுமப்படி திரியக்குகள் யானை முதலாக எறும்பு கடைபூசித்தது சோழபூமி காசி மற்றுமுள்ள தலங்களாகையாற் சாம்பசிவனே உபாசியர் மற்றுள்ளவெல்லாம் உபாசகாளென்று சகலசாஸ்திர நிர்ணயம். ஒன்பதாவது சர்வரானு முபாசிய ரென்கிற லெக்ஷணமுற்றும் சிவசிதம்பரந்துணை சொக்கலிங்கந்துணை பரமசிவனுடைய பாதார விந்தமேகதி. சிவமயம்.

பத்தாவது சர்வலோக நமக்கிருத வென்கிறது. வேதங்களெல்லமா எந்தெந்த தேவதையை வந்தனம் பண்ணுகிறதோ அவனே சர்வலோக

சமக்கிருதரென்று சகல சாஸ்திர நிர்ணயம் முதல் வேதம் ருத்ர அத்தியாயத்திலும் இரண்டாம் வேதம் சதருத்திரியத்திலும் ஆரணம் சிஞ்சுமாருபரிடதத்திலும் மூன்றும் வேதம் ஏகாதசருத்திரீயத்திலும் பின்னையொரு சாமவேதத்திலும் அதர்வசிகா உபரிடதத்திலும் வேதபுருஷன் சாம்பசிவனுக்கு வெகு வந்தனம் விண்டுபிர்மா இந்திரன் அக்கினி குபேரன் முதலான பேருக்கொவ்வொரு வந்தனம் பண்ணியது மிருக்கில் அன்னியதேவதைகளை வந்தனம் பண்ணியது ருத்திராவுன்பொருட்டென்று சொல்லிப் போகையால் வந்தனமெல்லாம் சாம்பசிவனுக்கே. பரதசாத்திரத்திலும் தேவேந்திரனுக்கு வச்சிரமுத்திரை பிர்மாவுக்கு பற்பமுத்திரை விட்டுணுவுக்கு சங்குமுத்திரை ருத்திரருக்கு சிரசாஞ்சலி முத்திரை சொன்னதினாலும் மற்றுமுள்ள பிரமாணங்களினாலும் நமஸ்காரமுடையவன் சாம்பசிவனே. அஞ்சாம் வேதமாயிருக்கிற பாரதம் அனுசாசனிகபர்வம் மயேசுரசம்வாதத்திற் றேவி தேவரைப்பார்த்து கதைகேட்கிற போதெல்லாம் பகவன தேவதேவச் சர்வதர நமகிருதனென்றும் பகவனே தேவதேவ சர்வலோக நமக்கிருதனென்று சொல்லுகையினாலும் மற்றுள்ள பிரமாணத்தினாலும் சாம்பசிவனே சர்வலோக நமக்கிருதனென்று சகலசாஸ்திர நிர்ணயம்.

வி. குஞ்சிதபாதம் பிள்ளை.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவாரூர் நான் மணி மாலை.

காப்பு.

—:o:—

நேரிசை வெண்பா.

நாடுங் கமலேசர் நான்மணிமாலைக்குமிகப்
பாடுங் கவிதை நலம் பாலிக்கும்—வீடொன்ற
முப்போதகத்தின் முயல்வோர்க்கு முன்னிற்குங்
கைப் போதகத்தின் கழல்.

இதன் பொருள். வீடு ஒன்ற=மோட்சத்தை யடைய, முப்போது= மூன்று காலத்திலும், அகத்தில்=மனத்தினிடத்தே, முயல்வோர்க்கு=சிந்

திப்பவர்க்கு முன்நிற்கும் = வந்து உதவுகின்ற, கைப்போதகத்தின் = விநாயகப்பெருமானது, கழல் = திருவடி, நாடும் = யாவராலும் விரும்பும், கமலேசர் = திருவாரூரிலெழுந்தருளிய சிவபெருமான் (விடயமாகச் சொல்லும்) நான்மணிமாலைக்கு நால்வகைப்பாக்களால் அமைந்த, (நான் மணிமாலை யென்ற பிரபந்தத்திற்கு) மிகப்பாடும் = நன்றாகப் பாடக்கூடிய, கவிதை நலம் = சொற்சுவை பொருட்சுவையோடுகூடிய கவியின் பயனை, பாலிக்கும் = திருவருள் செய்யும். (எ-று).

நேரிசை வெண்பா.

நீரூர்ந்த முந்நீர் நிலவலய நீள் கொடிஞ்சித்
தேரூர்ந்த செல்வத் தியாகனே—யாரூர
வீதி விடங்கா வடங்கா வேலை விடம் போலுமதிப்
பாதி விடங்கா கடைக்கண் பார்த்து.

(இ-ள்.) நீர் ஊர்ந்த = ஜலம் நிரம்பிய, முந்நீர் = சமுத்திரம் சூழ்ந்த, நிலவலயம் = பூமியாகிய, நீள் கொடிஞ்சி = நீண்ட தோர் தட்டினையுடைய, தேர் = இரதத்தினை, ஊர்ந்த = ஆரோகணித்த. செல்வத்தியாகனே = எல்லாச் செல்வங்களையும் அடியவர்க்கு வரையாது கொடுக்கும் வள்ளலே, ஆரூர = திருவாரூரில் எழுந்தருளிய பெரியோனே வீதி விடங்கா = வீதி விடங்கனென்னுந் திருநாமமுடையோய் அடங்கா = மற்றைத் தேவர்க்கு அடங்காத வேலை விடம் போலும் = பாற்கடலில் தோன்றிய ஆலாலவிடம்போலும், மதிப்பாதிவிடம் = பிறைச்சந்திரனிடத்துத் தோன்றும் விடமாகிய துன்பத்தினை, கடைக்கண் பார்த்து = திருக்கடைக்கண்ணால் நோக்கி, கா = காப்பாற்றுவீராக. (எ-று) வீதி உலாப்போந்த தலைவனைக் கண்டாளாய தலைவி ஒருதலைக் காமங் கொண்டாளாய் எண்ணுந்தொறும் துன்புறுத்தும் பிறைச்சந்திரனினின்றும் காத்தல் வேண்டும் என்று இரந்து கூறியதாம்.

கட்டளைக் கலித்துறை.

பார்பெற்ற வல்லிக்கும் பாகீரதிக்கு மெய்ப் பாதியுமத்
தார் பெற்ற வேணியுந் தந்தார் தியாகர் தடம்புயத்தின்
சீர் பெற்றிலே மென்று நாணுல் வணங்கிச் சிலையெனவும்
பேர்பெற்ற தாற்பொன் மலைகுனித்தாரெம் பிரானென்பரே.

(இ-ள்.) பார் = பூமியினை (உலகத்திலுள்ள ஆன்மாக்களை) பெற்ற = பயந்தெடுத்த, வல்லிக்கும் = உமாதேவியார்க்கும், மெய்ப்பாதியும் = இடப்

பாகத்தினையும், பாகீரதிக்கும் = கங்கைக்கும், அ = அந்த, தார்பெற்ற = கொன்றைமாலையை அடையாளப்பூவாக அணிந்த, வேணியும் = திருச்சடையினையும்; தந்தார் = திருவருள் செய்தவராகிய, தியாகர் = தியாகேசப்பெருமான், தடம்புயத்தின் = விசாலமாகிய திருப்புயங்களின், சீர் = சிறப்பினை, பெற்றிலேம் என்று = பெற்றிலேமென்று எண்ணி, நாணால் வணங்கி = நாணினால் வணக்கப்பட்டு, சிலையெனவும் = வில்லெனவும், பேர்பெற்றதால் = பெயரையடைந்ததால், எம்பிரான் = எமது பெருமானார், பொன்மலை குனித்தார் = மேருமலையை வில்லாக வளைத்தார். என்பர் = என்று கூறுவர் உலகோர் ஏ-அசை. பெருமான் மேருமலையை வாசுகியாகிய நாண்பூட்டி வில்லாக வணங்கினர் என்னும் புராணகதையினை இவர் சிலேடையாக அமைப்பான் கருதிப் பூதேவியும், கங்கையும் பெருமானின் திருமேனிகளையடையவும் நாம் அடையாதிருப்பது தகுதியாகாதெனத்தானே நாணால் வணங்கிச் சிலையெனும் (கல்) தன் பெயர் மாறுமாலே சிலை (வில்) யாயது என்று கூறியதாகும்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

என்பாகநகுதலையோ டெழிலாக வணிந்தகமலேசமற்றுன்
றன்பாக மிடப்பாகத் தலைவிகருவிழிதோய்ந்துந் தலைவிபாகத்
தன்பாக நின்றிரு நோக்கவை தோய்ந்துந் திருநிறம் வேறுகையாலப்
பொன்பாக மிதுவெனவு நின்பாக மிதுவெனவும் புகலொணாதே.

(இ-ள்.) ஆகம் = தேகத்தில், என்பு = எலும்புமாலையினையும், நகு = விளங்குகின்ற தலையோடு = பிரமகபாலத்தினையும், எழிலாக = அழகுபொருந்த (நானே பரமென்றுயாவருமறிய) அணிந்த = தரித்துக்கொண்ட, கமலேச = திருவாரூர்த்தியாகரே! உன்றன் = தேவரீரது பாகம் = வலப்பாகமாகிய திருமேனியானது, இடப்பாகம் = இடது பாகத்தில் எழுந்தருளிய, தலைவி = தேவியாரது, கருவிழி = மையுண்டவிழி, தோய்ந்தும் = படிந்தும், தலைவி = அத்தலைவியாரது, பாகத்து = இடப்பாகமாகிய திருமேனியின்கண், அன்பாக = அன்புடன், நின் = தேவரீரது திருநோக்கு அவை = திருக்கண்களானவை, தோய்ந்தும் = படிந்தும், திருநிறம் = உங்களிருவர்க்குமுள்ள இயற்கையாகிய நிறம், வேறுகையால் = வேறுபடுகின்றனவாதலால், அப்பொன்பாகம் = அப்பொன்போன்ற திருமேனியை உடையாளாகிய தேவியாரது பாகம், இது எனவும் = ஈதென்றும், நின்பாகம் = தேவரீரது திருமேனி, இது எனவும் = ஈது என்றும், புகலொணாது = சொல்லுதற்கு இல்

லாததாகும். ஏ-அசை (லீலாமாத்திரமாக இறைவனும் இறைவியும் ஒருவரையொருவர் நோக்குங்கால் (அம்மையார் நோக்கும்) மையுண்டவிழியால் இறைவன் திருமேனியின் நிறம் மை நிறங்கொண்டும், இறைவன் சோம சூரிய அக்கினிகளாகிய மூன்று நேத்திரங்களால் பார்க்குந்தோறும் அம்மையார் பச்சைத்திருமேனி நிறம் வேறுபட்டும் நிற்பது என்பதாயிற்று. (இதனை யிவ்வாசிரியர் அருள்செய்த பிள்ளைத்தமிழில் தேவியாரைப் புகழ்ந்து சொல்லுங்காலத்து "தார்கொண்ட மதிமுடி யொருத்தன் திருக்கண் மலர்சாத்தக் கிளர்ந்து பொங்கித் தவழுமிள வெயிலுமழ நிலவுமள வளவலாற் றண்ணென்று வெச்சென்று பொன்,-வார்கொண்டணிந்தமுலை மலைவல்லி கற்பூர வல்லி யபிராமவல்லி, மாணிக்க வல்லி மரகத வல்லி யபிடேகவல்லி சொற்றமிழ்த்தழையவே" என்பதனால் அறிக.

நேரிசை யாசிரியப்பா.

ஒண்கதிர் பரப்பும் செங்கதிர்க்கடவுள்
வெயில்கண்டறியா வீங்கிருட் பிழம்பிற் .
புயல்கண் படுக்கும் பூந்தண் பொதும்பிற்
காவலர்ப் பயந்து பாதபத் தொதுங்கிய
விருவேறுருவிற் கரு விரன் மந்தி
பொன்னிறம் பழுத்த பூஞ்சுளை வருக்கை
முன்னுறக் கண்டனு முளையெயி றிலங்க
மடித்தலத்திருத்தி வகிர்ந்து வள்ளுகிராற்
றெருடுத்த பொற்சுளைபல வெடுத்து வாய்மடுப்பது
மானுட மடங்க ஆணிடைத்தோன்றி
யாடகப் பெயரி னவுணன் மார் பிடந்து
நீடுபைங்குடரி னிணங்கவர்ந் துண்டென
விழும் பூதி பயக்கு நறும்பணை மருதத்
தந்தண ரூரெந்தை யெம் பெரும
சிங்கஞ் சுமந்த செழுமணித் தவிசிற்
கங்குலும் பகலுங் கலந்தினி திருந்தாங்
கிடம் வலம் பொலிந்த விறைவியு நீயு
நடுவண் வைகு நாகிளங் குழவியை
யொருவிரினொருவி ருள்ளநெக்குருக
விருவிருந்தனித்தனி யேந்தினிர் தழீஇ
முச்சுடர் குளிர்ப்ப முறைமுறை நோக்கி

யுச்சிமோந்துமப் பச்சிளங்குழவி
நாறு செங்குமுதத் தேறலோடொழுகு
மெழுதாக்கிளவியி னேழிசைபழுத்த
விழுமென்குரல மழலைத்தீஞ்சொற்
சுவையமுதுண்ணுஞ் செவிகளுக்கையவென்
பொருளில் புன்மொழி பேரக்கி
யருள் பெறவமைந்த தோரற்புத முடைத்தே.

(இ ள்.) ஒள்கதிர்=ஒளிதங்கியகிரணங்களை, பரப்பும்=உலகெங்கும் பரவச்செய்யும், செங்கதிர்க்கடவுள்=சூரியனது, வெயில்=கிரணத்தை, கண்டு அறியா=பார்த்தறியாத, வீங்கு இருள்=மிகுந்த இருளினையுடைய, பிழம்பில்=கூட்டத்தில், புயல்=மேகமானது, கண்படுக்கும=தூங்கும், பூ=அழகிய, தண்=குளிர்ந்த, பொதும்பில்=சோலையில், காவலர்=காவலாளர்க்கு, பயந்து=பயப்பட்டு, பாதபத்து=மரத்தினடியில் ஒதுங்கிய=ஒளித்த இருவேறுருவில்=இருவகைப்பட்ட வுருவத்தையுடைய, கருவிரல் மந்தி=கரியவிரலையுடைய குரங்கானது, பொன்னிறம் பழுத்த பொன் போலும் நிறங்கொண்டு பழுத்த, பூசுளை=அழகிய சுளைகளையுடைய, வருக்கை=பலவின்கனி, முன்னுற=தனக்குமுன்னே யிருக்க, காண்டலும்=பார்த்தலும், முளையெயிறு = முளைபோன்ற பற்கள், இலங்க = வெளியில் காணப்பட (சந்தோஷித்து) மடித்தலத்து=தனதுமடியில், இருத்தி=அப்பலாப்பழத்தினை வைத்து, வள்உகிரால்=நீண்ட நகங்களால், வகிர்ந்து=பிளந்து, தொடுத்த=ஒன்றோடு ஒன்று பிணைந்துள்ள, பொன்சுளை=பொன் போலும் சுளைகள், பல எடுத்து=பலவற்றைக் கைக்கொண்டு, வாய் மடுப்பது=உண்பதானது, மானுடமடங்கல்=நரசிங்க மூர்த்தியானவர், தூணிடைத் தோன்றி=தூண் ஒன்றில் அவதரித்து, ஆடகப் பெயரின் அவுணன்=இரணியனது, மார்பு இடந்து=மார்பினைப் பிளந்து, நீடு=நீண்ட, பை=பசிய, குடலின்=குடல்களது,நிணம்=கொழுப்பினை, கவர்ந்து உண்டு என=மிகுதியும் உண்டாற்போல் காணப்படுதல், இறும்பூதுபயக்கும்=ஆச்சரியத்தை உண்டாக்கும், நறும்பணை=நல்ல வயல்களையுடைய, மருதம்=மருதநிலத்தாற் சூழப்பட்ட, அந்தண் ஆரூர் = அழகியகுளிர்ந்திருவாரூரில் எழுந்தருளிய, எந்தை=என் தந்தையே, எம்பெரும = எம்பெருமானே, சிங்கம் சுமந்த=சிங்கத்தால் சுமக்கப்பட்ட, செழுமணி=செழித்தமாணிக்கங்கள் அழுத்திய, தவிசில்=இருக்கையில், கங்குலும்=இரவும், பகலும்=பகற்போதும் கலந்து = ஒன்றாகக்கலந்து, இனிதிருந்

தாங்கு=இனிமை பெற இருந்தாற்போல், இடம் வலம் பொலிந்த=இடத்தும் வலத்தும் விளங்கிய, இறைவியும் நீயும்=தலைவியும் நீரும், நடுவண்வைகும்=உங்களிருவர்க்கும் நடுவே யிருக்கும். நாகு இளம் குழவியை=மிக்க இளங்குழந்தையாகிய குமாரக் கடவுளை, ஒருவிரின் ஒருவிர்=ஒருவருக்கொருவர், உள்ளம் நெக்கு உருக=திருவுள்ளம் மிகுதியும் களிக்க, தனித்தனி இருவிரும் ஏந்தினிர்=ஒவ்வொருவராக அக்குழந்தையை கையினில் ஏந்தினவர்களாய், தழீஇ=தழுவிக்கொண்டு, முச்சுடர் குளிர்ப்ப=சோமசூரிய அக்கினிகளாகிய மூன்று திருநேத்திரங்களின் ஒளிகளும் விழ, முறை முறைநோக்கி=முறை முறையாகத் திருக்கண்சாத்தி, உச்சி மோந்தும்=உச்சியினை மோந்தும். அப்பச்சிளங் குழவி=அப்பசிய குழந்தையினது, நாறும்=மணக்கின்ற, செம் குமுதம்=சிவந்த அல்லிபோன்ற உதட்டின், தேறலோடு=தேனினோடு, ஒழுகும்=வெளிவருகின்ற, எழுதாக்கிளவியின்=வேதத்தினது, எழிசை பழுத்து=எழு இசைகளோடு முதிர்ந்து, விழுமென்குரல்=மிகுதியும் மெதுவாகிய குரலோடுகூடிய, மழலைத்தீஞ்சொல்=வாய் நிரம்பாத இனிய சொற்களினது, சுவை அமுது=சுவைதங்கிய அமுதத்தை, உண்ணும்=கேட்கும், செவிகளுக்கு=திருச்செவிகளிடத்தே ஐய=ஐயனே, என்=சிறியேனது, பொருள் இல்=பொருளற்ற, புன்மொழிபோக்கி=சிறிய வார்த்தைகளையுஞ் செலுத்தி, அருள் பெற=தேவரீரது திருவருளை யடியேன் பெறும்படி, அமைந்தது=திருவுள்ளங்கொண்டது, ஓர் அற்புதம் உடைத்து=ஓர் வியப்பாகவே வுள்ளது ஏ—அசை.

இவ்வாசிரியர் குமாரக் கடவுளது அருளால் பேசத்தலைப்பட்டவராதலால் அச்சிறப்புத்தோன்ற அப்பெருமானின் பெருமையை ஈண்டுத் தோத்திரம் செய்ததாகும்.

(இன்னும் வரும்.)

பத்திராதிபர்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

விநாயகப் பிரபாவத்தில் கண்டது.

தூர்வை யாசகப் படலம்.

தொகுதி - ௮ - பகுதி 4 - பக்கம் - 96 - தொடர்ச்சி

இவ்வற்புதத்தைச் சனகராஜன் கேள்வியுற்று சரேலென்றெழுந்து வந்து அந்தணர்களது திருவிளையாடல்களைப்பார்த்து, இஃது கனவேயன்றி நனவாகக் காணப்படவில்லை. அஃதல்லாவிடின் மாயை யென்றெண்ணத்தக்கதேயன்றி மற்றொன்றல்லவென்று மதித்து அந்நகரத்திலுள்ளனவும் அந்நகரத்தைப் புடைசூழ்ந்த நாடுகளிலுள்ளனவுமான பதார்த்தங்களையெல்லாம் மனோவேகமாகச் சென்று கொண்டுவரும்படித் தூதர்களுக்கு ஆஞ்ஞாபித்தனன். அத்தூதர்கள் ஆங்காங்கிருக்கின்ற 'எல்லாச் சனங்களுக்கு மறிவிக்க, அவ்வவர்களும் வெந்ததும் வேகாததுமாயுள்ள அளவற்ற பதார்த்தங்களைக் கொண்டுவந்து மலைபோலக்குவித்தார்கள். உடனே சர்வசங்கார காலத்தில் சகல லோகங்களையும் அவ்வுலகங்களிலுள்ள எல்லாப் பொருள்களையும் எண்ணிறந்த ஜீவராசிகளையும் இமைப்போதிற்றமது உதரத்துள் ஒளிக்கச்செய்யவல்ல வேதியரானவர் அப்பதார்த்தங்களை யெல்லாம் அரசன் காணும்படியாக முன்போலவே உண்டருளினர். இவ்வாறு யாவையும் உண்டருளிய அதிசயத்தைக் கண்டவர்களெல்லாம் பயந்து இன்னும் இக்குலவேதியன் பசிதீராமையால் நம்மையுமெடுத்து விழுங்கிவிடுவனென்று நாற்றிசைகளினு மோடிப்போனார்கள். அமைச்சர்களெல்லாரும் நடுநடுங்கி இம்மறையவன் தேவனோ, அசுரனோ பூதனோ மற்றெவ்வகைத் தானவனோ அறிகிலேம், இவன் மனிதனாயின் இவ்வாறுண்ணத்தக்கவனன்றென்று சந்தேகித்தனர். அரசனுமதிக அச்சங்கொண்டு வடவாமுகாக்கினியே ஓர்வடிவங் கொண்டுவந்ததோ, அல்லது சிவபெருமானது நுதல்விழித்தீயோவென்று மனங்கலங்கினவனாய் நமது நகரமும் நாமும் யானையுண்ட விளங்கனிபோலவும் உயிர் நீங்கிய வுடல்போலவும் ஆய்விட்டதேயென்றனன்.

எல்லாபொருள்களையும் இவரெதிரில் கொண்டுவந்து படைத்தும் இன்னும் இவர் பசிக்கு இறுதிகண்டதில்லை யாதலால், இவர்க்கு அமுதளிப்பவர் மனிதருக்குளில்லை. யோசிக்குமிடத்து தேவர் கூட்டத்தினு மிரார்

கள். இனியாம் செய்யத்தக்கது ஒன்றையுங்காணேம். இவரை வெளிப்
படுத்துவது எவ்வகையினாலென்று யோசித்து விநாயகமூர்த்தி சமீபத்தில்
வந்து சுவாமீ! தேவரீர் அந்தணராயும் இவ்வுலகில் தரித்திரத்தால் மிக
வும் வருத்த முற்றவராயும் காணப்பட்டதால் உமக்கு உணவுதருவதாய்
ஒப்புக்கொண்டேனே யன்றி இவ்வாறு வெந்ததும் வேகாததுமாயுள்ள
பதார்த்தங்களை யெல்லாம் வரவழைத்துத் தருகிறேனென்று ஒப்புக்கொ
ண்டேனா? அப்படித்தந்தும் உமதுபசிநோய் பூர்த்தியாய்த்தணிந்ததோ
வென்றால் அதுவுமில்லை இனி அந்தக்குறையைச்சிறிதுமின்றி நீக்கத்தக்க
வர்களிடத்தில் எழுந்தருளலாமென்று சொல்ல அதை எமதாண்டவராகிய
விநாயகர் பெருமான் கேட்டு, ஆ ஆ அரசனே! உன்செயல்மிக நன்று நன்று.
இந்நாட்டிலுள் ளோர்களெல்லாம் உன்னை வரையாது கொடுக்கும் வள்ள
லென்று சொல்வதை உண்மையென்று மதித்து எனது கள்ளப்பசியை
களையுமாறல்லவா வந்தேன்? அப்படி வந்த எனக்கு அப்பசியை அழலில்
அவிசொரிந்து அதிகரிக்கச் செய்ததுபோல, அற்பபோசனந்தந்து அதிகரி
க்கச்செய்தாய், பின்னும் உமபசிக்கு எல்லாப்பதார்த்தங்களையு மளித்து
விட்டேன், இன்னுஞ்சிறிதுண்டாயின தீர்க்கத்தக்கவர்களிடத்திற் செல்லு
வீரென்று எனக்கு வழிகாட்டுகின்றனை. உனது வாய்மையுங் கீர்த்தியுங்
கிருபையும் பெருமையும் மிக்க அழகாயிருக்கின்றன; பிரமம் நீயேயென்
றும் வேறொருபிரமமில்லை யெனறும் கொடுக்கின்றதும் ஏற்கின்றதும்
உனது வயத்ததென்றுங்கருதி நிச்சயங் கொண்டிறுமாந்திருக்கின்ற உன
க்கு எனதுபசியை நீக்க வல்லபமில்லாதிருக்குமா? இன்னுஞ்
சிருட்டிசெய்துக் கொடுப்பதற்குப் பான்மாறி மறைவாய்ப் பேசுகின்றனை
போலும். எல்லையற்றபதார்த்தங்களை இமைக்குமுன் ஆக்கவும் அழிக்கவும்
வல்லபமுள்ள ஒன்றான பிரமம் நீயேயாயிருக்க உன்னையாசித்துவந்த என்
பசியைநீக்காமல், இல்லைபோவென்றுரைப்பது வல்லபமாகுமா? ஈவதற்
கிடமின்றியல்லற் படுகின்ற பிரமமோ நீ! பிரமம் ஓர் சுகத்தைவிழை
ந்தும் அதுகிடைக்கவேண்டுமென்று யத்தனஞ்செய்தும் இடையில் வரு
கிறதுன்பங்கட்கு ஏங்கியுமிருக்குமோ? ஓ சனகனே! உனது பிரமத்
துவத்தை நெருப்பிற்போடென்று சொல்லிக்கோபித்துச் சரேலென்று
அவ்விடத்தினின்றுநீங்கி அரண்மனை வாயிலைக்கடந்தனர். அவ்வாறு செல்
கின்ற அந்தணரை ஜனகராஜன் பார்த்து இவர்கூறியதெல்லாம் மேலான
வார்த்தைகளாயிருப்பதுமன்றி இவர்செய்த செய்கைகளுந் திவ்வியமாக
இருந்தன. அம்மா! இவரை இன்னாரென்றறிவது மகாதுல்லபமாக விரு
க்கின்றது. இதுவரையில் நான் கொண்டிருந்த கொள்கைக்குப்பழுது நேர்
ந்ததென்றுநாணி வருத்தமுற்றிருந்தனன் நானே பிரமமென்றிருந்த ஜனக
மகாராஜன்.

(இன்னும்வரும்.)

ஓம் சிவகணேச கந்தப்ப சபையில் ஒருவராகிய,
கி. இராஜூ கிராமணியார்,
இராஜவிலாஸ், திருமயிலை